[1994 ஏப்ரல் 13

காலை 10-00 மணிக்கும் பிற்பகல் 2-00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கொடுப்பு நடைபெறும்.

## 5. கவன ஈர்ப்பு

**நன்னிலத்தில் அரசலாற்றின் குறுக்கே அம்பல் கிராமத்தில் ரெகுலேட்டர் பழுதடைந்துள்ளதால் தண்ணீர் பாசனத்திற்குப் பயன்படாதது குறித்து.**

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் க. கோபால் அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**டாக்டர் க. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் செயற் பொறியாளர் உபகோட்டத்தில் அரசலாற்றின் குறுக்கே அம்பல் கிராமத்தில் கட்டியுள்ள ரெகுலேட்டர் இடிந்து தண்ணீர் பாசனத்திற்கு உபயோகமற்றதாக உள்ளது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

நன்னிலம் தொகுதி, அரசலாற்றின் குறுக்கே அம்பல் கிராமத்தின் அருகில் உள்ள ரெகுலேட்டர் கடந்த 1993-ஆம் வருடம் டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளது. அவற்றைப் புதுப்பிக்கும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. இந்த அடைப்புக் காலத்திற்குள் இப்பணி முடிவடைந்து, வரும் பாசனக் காலத்தில் தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் க. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் புதுப்பிக்கும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்

கொள்ளப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது, இந்த அடைப்புக் காலத்திற்குள் இப்பணி முடிவடைந்து, வரும் பாசனக் காலத்தில் தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது அந்த ரெகுலேட்டரிலிருந்து கிட்டத்தட்ட 1800 ஏக்கர் பாசனம் பெறக்கூடிய நிலை இருக்கிறது. கிடாமங்கலம் நடுவாய்க்கால் போன்றவற்றிற்கு அம்பல் வாய்க்கால் வழியாக இந்தத் தண்ணீர் பாயக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கடந்த கடும் புயல் வெள்ளத்தால் அந்த ரெகுலேட்டர் முழுவதுமாகப் பதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் இருக்கிறது. நானும் அதனுடைய கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர் எல்லோரும் சென்று பார்த்தபோது அந்த ரெகுலேட்டரில் கிட்டத்தட்ட 6 தூண்கள் முழுவதும் பழுதடைந்து அதன்மூலம் மற்ற தூண்களும் இடிகிற சூழ்நிலையில் இருக்கின்றன. அதோடு அதனுடைய பேஸ்மென்ட்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியாகக் கேட்கவேண்டும்.

**டாக்டர் க. கோபால் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேஸ்மென்ட் பாதிக்கப்பட்ட நிலையில் தண்ணீர் போவதற்கு லாயக்கற்ற வகையில், கட்டுப்படுத்துவதற்கு இயலாத நிலையில் இருக்கிறது. எனவே இப்போது ஒதுக்கியுள்ள தொகை மிகவும் குறைவாக இருப்பதால் மீண்டும் நிதியை அதிகமாக ஒதுக்கி முழு ரெகுலேட்டரையும் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதி அரசலாற்றின் குறுக்கே அம்பல் கிராமத்தில் உள்ள ரெகுலேட்டர் 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் சேதம் அடைந்து, அதைப் புதுப்பிக்கின்ற பணி இன்றைக்குச் செயலாக்கத்தில் இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள பாசனக் கால்வாயில் தண்ணீரை ஒழுங்கு-படுத்துவதற்காக அந்த ரெகுலேட்டரைச் சீரமைக்கவேண்டுமென்று நம்முடைய பொதுப் பணித் துறையின் சார்பிலே அங்கே வேலைகள் நடைபெறுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தெரிவித்தார்கள். அதை விரிவுபடுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்கிற பணிகளை முடித்துவிட்டு அதன்பின் அதனை விரிவுப்படுத்துவதற்கான பணிகள் குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பது பற்றி அரசு பின்னர் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1994 ஏப்ரல் 13

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ச. அழகிரி, இருக்கையில் இல்லை.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. நா. சா. பழனிசாமி, பொதுக்கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக.

*திரு. நா. சா. பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக அக்குழுவின் 1993-94 ஆம் ஆண்டிற்கான 122-வது முதல் 125-வது வரையிலான (பத்தாவது சட்டமன்றப் பேரவை) நான்கு அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி கற்பகம் இளங்கோ, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பாக.

*திருமதி கற்பகம் இளங்கோ:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1993-94 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 42 முதல் 45 வரையிலான அறிக்கைகளைக் குழுத்தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானங்கள்

### (அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 195-வது விதியின் கீழ், 1994–95 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி